# எழுத்தாளர்களைக் கொண்டாடும் முதலமைச்சர்!

“இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாறு இனி தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் அறிவியல் பூர்வமாக நிறுவுவதே நமது அரசின் தலையாயக் கடமை”

**- மு.க. ஸ்டாலின்**



**இமையம்**
*மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஆணையத் துணைத் தலைவர்*



தமிழ்நாட்டின் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற நாளிலிருந்து, மொழிக்காகவும், கலைப்பணி புரிபவர்களுக்காகவும், எழுத்தாளர்களுக்காகவும் தொடர்ந்து அவர் செய்துவரும் முன்னெடுப்புகள் இதுவரை வேறு எந்த மாநில முதலமைச்சராலும் மேற்கொள்ளப்படாதவை. தமிழ்நாட்டின்வரலாற்றிலேயேவேறுஎந்தமுதலமைச்சரும் இதற்கு முன் செய்யாத முயற்சியாகும்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு நேரு அவர்களால் 1954இல் சாகித்திய அகாதெமி, லலித்கலா அகாதெமி ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளிலுள்ள சிறந்த படைப்புகளுக்கு சாகித்திய அகாதெமி, லலித்கலா அகாதெமி விருது வழங்கிவருகிறது. இந்த விருதுகள் அந்தந்த எழுத்தாளர்களுக்கு, கலைஞர்களுக்கு ஒரு பெரிய கௌரவமாகக் கருதப்பட்டு வந்தது.

**சாகித்திய அகாதெமியும், லலித்கலா அகாதெமியும் தன்னாட்சி நிறுவனமாகச் செயல்பட்டு வந்தது. இதுவரை ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்வுக் குழுவின் முடிவே இறுதியாக இருந்தது. இந்த ஆண்டு கலாச்சார பண்பாட்டுத் துறையின் அமைச்சர், ‘இறுதி முடிவினை நாங்கள்தான் அறிவிப்போம்’ என்று சொல்லி, 2025ஆம் ஆண்டுக்கான விருது பட்டியலை நிறுத்திவைத்துள்ளார்.**

**இச்செயல் அறிவுத் துறைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. மோடி பிரதமராகப் பொறுப்பேற்ற நாளிலிருந்து எல்லாத் துறைகளிலும் பா.ஜ.க. மயம், காவி மயம் என்ற போக்கைக் கடைப்பிடித்து வருகிறார். தன்னுடைய பா.ஜ.க. மய, காவி மயக் கொள்கையை மொழி, இலக்கியம், கலாச்சாரத் துறையிலும் கடைப்பிடிக்க ஆரம்பித்துவிட்டார் என்பதற்கான முன்னோட்டம்தான் இது.**

2025ஆம் ஆண்டுக்கான விருது பட்டியல் நிறுத்திவைப்பு, விருது பட்டியலில் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். பஜ்ரங்தள் போன்ற அமைப்புகளைச் சார்ந்த ஆட்கள் இருக்கிறார்களா, இல்லையென்றால் அவர்களைச் சேர்ப்பது என்ற நடவடிக்கையில் ஒன்றிய கலாச்சாரத் துறை ஈடுபட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாடு அரசு, “தேசிய விருது அறிவிக்க வேண்டும், அது, சாகித்திய அகாதெமி, ஞானபீட விருதைவிட பெரியதாக இருக்க வேண்டும். சாகித்திய அகாதெமி வழங்கும் தொகையைவிட கூடுதலாக இருக்க வேண்டும்” என்ற கோரிக்கையை, தமிழ்நாட்டின் முதலமைச்சரிடம் நான் 8.1.26ஆம் தேதியில் வழங்கினேன்.

என்னுடைய கோரிக்கையை ஏற்று, 18.01.2026 அன்று நடைபெற்ற சென்னை சர்வதேச புத்தகக் கண்காட்சியில், புதிதாக வழங்கப்பட இருக்கும் ‘செம்மொழி இலக்கிய விருது’ குறித்த அறிவிப்பினை வெளியிட்டு,

**“தமிழக அரசால் முதற்கட்டமாக தமிழ், மலையாளம், கன்னடம், மராத்தி, ஒடியா, வங்கம் உள்ளிட்ட மொழிகளுக்கு இந்த விருது வழங்கப்படும். ஒவ்வொரு மொழியிலிருந்தும் ஒரு எழுத்தாளருக்கு விருது வழங்கப்படும். விருதுத் தொகையாக ரூ.5 லட்சம் வழங்கப்படும். இந்த விருது சாகித்திய அகாதெமி விருதைவிடவும், ஞானபீட விருதைவிடவும் உயர்வான, கௌரவமிக்க விருதாக வழங்கப்படும்” என்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் அறிவித்தார். இந்த அறிவிப்பு இந்திய அளவில் உள்ள எழுத்தாளர்கள், கலைஞர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இது, இந்தியாவில் வேறு எந்த மாநில அரசும் வழங்காத, தேசிய அளவிலான இலக்கிய விருதாகும். இதற்கு முன் வேறு எந்த மாநில அரசும் இவ்வாறு தேசிய விருது வழங்கியதில்லை.**

“இந்த விருது வழங்கப்படும்போது தகுதியான நபர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். அரசியல், அரசு அதிகாரம், தனிநபர் அதிகாரம், குழு அதிகாரம் எதுவும் இல்லாமல் முழுமையாகத் திறமையின் அடிப்படையிலும், படைப்புத் தகுதியின் அடிப்படையிலும் மட்டுமே இந்த விருது வழங்கப்படும். அந்தந்த மொழியில் உள்ள மிகச்சிறந்த இலக்கிய வல்லுநர்களால் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்கு மட்டுமே இந்த விருது வழங்கப்படும். இலக்கியத்திற்கு, அறிவிற்கு மொழியோ, புவியியல் எல்லைகளோ ஒரு தடையாக இருக்கக் கூடாது, இருக்கவும் முடியாது. அறிவும், அறிவியலும் உலகத்திற்குச் சொந்தமானவை. அந்த வகையில் இலக்கியமும் பொதுவானது, உலக மக்களுக்கானது. இத்தகைய பார்வையுடன் அறிவையும், அறிவியலையும் கொண்டாடும் அரசாகவும், எழுத்தாளர்களை, கலைஞர்களைப் போற்றும் அரசாகவும் இந்த அரசு செயல்படும்” என்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் பேசினார்.

“சாகித்திய அகாதெமி விருது வழங்கும் விஷயத்தில் ஏன் ஒன்றிய அரசு தலையிட்டு, அரசியல் செய்கிறது” என்ற கேள்வியையும் எழுப்பினார். “அறிவுத் துறையிலும் காவி மயத்தைக் கொண்டுவர ஒன்றிய அரசு நினைக்கிறது. இந்தப் போக்கு மொழி, இலக்கியம், பண்பாடு போன்ற துறைகளைச் சீரழித்துவிடும்” என்று எச்சரிக்கையும் செய்தார்.


“எழுத்தாளர்களைக் கொண்டாட வேண்டியதன் அவசியம் என்னவென்றால் அவர்கள்தான் தங்களுடைய படைப்பின் வழியாக மொழியைப் புதுப்பிக்கிறவர்களாகவும், மொழிக்கு உயிர் கொடுப்பவர்களாகவும், மொழி அழியாமல் பாதுகாப்பவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே, எழுத்தாளர்களைப் பாதுகாப்பது என்பது மொழியைப் பாதுகாப்பதாகும். அதன் அடிப்படையில்தான், மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நாளிலிருந்து, “அறிவைத் தேடி நீங்கள் அலைய வேண்டாம், அறிவை உங்களிடம் கொண்டுவந்து சேர்க்கிறேன். புத்தகங்களுக்காக நீங்கள் அலைய வேண்டாம். புத்தகங்களை நான் கொண்டுவந்து தருகிறேன். நீங்கள் படித்தால் மட்டும் போதும். அதற்காகத்தான், படி, படி, படி என்று சொல்கிறேன். படியுங்கள், மற்றதை நான் பார்த்துக்கொள்கிறேன்” என்ற முழக்கத்தோடு மாவட்டந்தோறும் புத்தகக் கண்காட்சிகளை நடத்திவருகிறார். தமிழ்நாட்டில் புத்தகக் கண்காட்சி நடைபெறாத நாளே இல்லை என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்.

பொருநை இலக்கிய விழா, வைகை இலக்கிய விழா, சென்னை இலக்கிய விழா என்று தொடர்ந்து தமிழ்நாட்டில் ஐம்பெரும் இலக்கிய விழாக்களையும் நடத்திவருகிறார். “மாவட்டந்தோறும் புத்தகக் கண்காட்சிகளிலும், ஐம்பெரும் கலை இலக்கிய விழாக்களிலும் எழுத்தாளர்கள், கலைஞர்கள் அழைக்கப்பட்டு, கௌரவிக்கப்பட வேண்டும். அவர்களின் படைப்புகள் காட்சிப்படுத்த வேண்டும், அவர்களை பேச வைக்க வேண்டும். சன்மானமாக கௌரவமான தொகை வழங்க வேண்டும். கண்ணியமாக நடத்த வேண்டும்” என்ற அறிவிப்பையும் வெளியிட்டு, அதன்படி செயல்படுத்தியும் வருகிறார்.

மாவட்ட அளவிலான புத்தகக் கண்காட்சிகளும், ஐம்பெரும் கலை இலக்கிய விழாக்களும் மட்டுமல்லாமல், கடந்த 4 ஆண்டுகளாக, சர்வதேச பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சியையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து நடத்திவருகிறது. சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி என்பது **‘தமிழ் அறிவு உலகத்திற்கும், உலக அறிவு தமிழுக்கும்’** என்ற நோக்கத்துடன் நடத்தப்பட்டுவருகிறது.

இந்தப் புத்தகக் கண்காட்சி, வாசகர்கள் புத்தகங்களை வாங்குவதற்கான நிகழ்வு அல்ல. தமிழ் இலக்கியங்களை உலக மொழிகளில் மொழிபெயர்க்கவும், உலக மொழி இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்க்கவும், தமிழ்ப் பதிப்பாளர்கள் பிற நாடுகளின் பதிப்பாளர்களுடன் சந்திக்கவும், பரஸ்பரம் ஒப்பந்தம் செய்துகொள்ளவும் முக்கியமான தளமாகவும் இது செயல்படுகிறது.

சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சியில் செய்யப்படும் இந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் மொழிபெயர்க்கப்படும் நூல்களுக்கு, தமிழ்நாடு அரசு 500 பிரதிகளுக்கு நிதியுதவியையும் வழங்குகிறது.



கீழடி அருங்காட்சியகம்!

இதற்கு முன்பு எழுத்தாளர்களும், பதிப்பாளர்களும் தங்களுடைய நூல்களைப் பிற மொழிகளில் மொழிபெயர்க்க முயற்சி எடுத்துவந்தார்கள். தற்போது தமிழ்நாடு அரசே முன்னெடுத்து வருகிறது. இது இந்தியாவில் வேறு எந்த மாநில அரசும் இதுவரை செய்யாத அரிய செயலாகும். இதன் மூலம் ஒரே ஆண்டில் தமிழிலிருந்து பல உலக மொழிகளுக்கும், உலக மொழிகளிலிருந்து தமிழுக்கும் பல நூல்கள் மொழிபெயர்ப்பதற்கான சாத்தியக்கூறு ஏற்பட்டிருக்கிறது.

சென்னை பன்னாட்டுப் புத்தகக் கண்காட்சி 2023ஆம் ஆண்டில் நடைபெற்றபோது, 24 நாடுகள் பங்கேற்றன. 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. 2024ஆம் ஆண்டில் 40 நாடுகள் பங்கேற்றன, 752 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. 2025ஆம் ஆண்டில் 64 நாடுகள் பங்கேற்றன, 1354 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. 2026ஆம் ஆண்டில் 102 நாடுகள் பங்கேற்றன, 1830 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. இந்த ஆண்டு மட்டும் 102 நாடுகளுக்குத் தமிழ் மொழி இலக்கியங்கள் செல்ல இருக்கின்றன.

அதே மாதிரி 102 நாடுகளிலுள்ள நூல்கள் தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட இருக்கின்றன. இது வெறும் புத்தக மொழிபெயர்ப்பு அல்ல. அறிவுப் பரிமாற்றம். கலாச்சார, பண்பாட்டுப் பரிமாற்றம். ஒவ்வொரு ஆண்டும் சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சியில் பங்குபெறும் நாடுகளின் எண்ணிக்கையும், செய்துகொள்ளப்படும் ஒப்பந்தங்களின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்து வருவதைப் பார்க்க முடியும். இதற்காக தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி எடுத்துக்கொண்ட அக்கறையும், உழைப்பும் அபாரமானது.

புத்தகங்களை வாசிப்பதும், புத்தக விழாக்களை நடத்துவதும் மட்டுமல்ல; எழுத்தாளர்களைக் கொண்டாட வேண்டும், அவர்களுக்கு, குடும்பத்திலும், சமூகத்திலும் உரிய கௌரவத்தை அளிக்க வேண்டும் என்ற நோக்கில், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ‘செந்தமிழ்ச் சிற்பிகள்’ என்ற அரங்கத்தை உருவாக்கியிருக்கிறார் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். அந்த அரங்கத்தில் கடந்த 400 ஆண்டு களாகத் தமிழ் மொழிக்கும் அதன் வளர்ச்சிக்கும் உழைத்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், மொழியியல் வல்லுநர்களின் உருவங்களை ஓவியங்களாக வரைந்து வைக்கப்பட்டுள்ளன. அதோடு, அந்தந்த எழுத்தாளர்கள், மொழியியல் வல்லுநர்கள் ஆகியோரின் நூல்கள் பற்றிய விவரங்கள், அவர்கள் பெற்ற விருதுகள், சமூக அங்கீகாரங்கள் போன்ற தகவல்கள் அனைத்தையும் எளிதாகப் பெறும் வகையில் QR Code வசதியுடன் இந்த அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.



பொருநை அருங்காட்சியகம்!

இச்செயல் இந்திய அளவிலும், உலக அளவிலும், எந்தவொரு அரசும் செய்யாத செயலாகும். எழுத்தாளர்களை, கலைஞர்களைப் பாதுகாப்பது என்பது, அவர்கள் உருவாக்கிய இலக்கிய இலக்கண செழுமைகளைப் பாதுகாப்பதாகும் என்பதை உணர்ந்ததாலேயே தமிழ்நாட்டு அரசின் முதலமைச்சர் ‘செந்தமிழ் சிற்பிகள்’ அரங்கத்தை உருவாக்கியிருக்கிறார். “எழுத்தாளர்களை, மொழியியல் வல்லுநர்களை, அவர்களின் குடும்பத்தார் மறந்திருக்கலாம், சமூகமும் மறந்திருக்கலாம். ஆனால், என்னுடைய அரசு மறக்காது. அவர்களைப் போற்றிப் பாதுகாப்பதே என் அரசின் நோக்கம்” என்ற உறுதியுடன் இந்த அரங்கத்தைச் செயல்படுத்தி வருகிறார் தமிழ்நாட்டின் முதலமைச்சர்.

பொதுவாக, எழுத்தாளர்கள், கலைஞர்கள் வறுமையில் வாழ்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். மன்னர்களைப் புகழ்ந்து பாடி, பரிசில் பெற்று வாழ்ந்ததாகத்தான் நம்முடைய இலக்கியங்கள் கூறுகின்றன. **“இனி, தமிழ்க் கவிஞர்கள், எழுத்தாளர்கள் மன்னனைப் புகழ்ந்து பரிசில் பெற்று வாழவேண்டிய அவசியம் இல்லை, அவர்களை வாழ வைப்பதும், பாதுகாப்பதும் என் அரசின் கடமை”** என்ற வகையில் தமிழ்நாட்டு அரசின் முதலமைச்சர் பல்வேறு விருதுகளை உருவாக்கியிருக்கிறார். அவற்றில் சிலவற்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

**‘முத்தமிழறிஞர் கலைஞர் விருது’ என்பது ரூ.10 லட்சம் தொகையும், 8 கிராம் தங்கமும் கொண்டது. ‘இலக்கிய மாமணி விருது’ என்பது மூன்று நபர்களுக்கு வழங்கப்படுகிறது. அது ரூ.5 லட்சம் தொகையும், 8 கிராம் தங்கமும் கொண்டது. ‘தகைசால் தமிழர் விருது’ என்பது 2021 முதல் வழங்கப்படுகிறது; ரூ.10 லட்சம் தொகை கொண்டது. ‘சி.பா. ஆதித்தனார் திங்கள் இதழ் விருது’ என்பது ரூ.2லட்சம் தொகை கொண்டது. ‘கலைஞர் எழுதுகோல் விருது’ என்பது ரூ.5 லட்சம் தொகை கொண்டது. இந்த விருது பத்திரிகை யாளர்களுக்காக வழங்கப்படுகிறது. இந்த அனைத்து விருதுகளும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் முதலமைச்சரான பிறகு உருவாக்கப்பட்டு, தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.**

எழுத்தாளர்களை, கலைஞர்களை, சமூகத்திற்காக வாழ்ந்தவர்களைக் கொண்டாடும் விதமாக, அவர்களுடைய நினைவுகளைப் போற்றும் விதமாக, சில அறிவிப்புகளைத் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டு, அந்த அறிவிப்பில் உள்ளவற்றை வருடந்தோறும் கடைப்பிடித்து வருகிறார். “தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள்’. இது உ.வே.சா. அவர்களின் பிறந்த நாள் அன்று கொண்டாடப்படுகிறது (19.02.2025). ‘கலைஞர் செம்மொழி நாள்’ இது 03.06.2025 முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தமிழ் மொழியை செம்மொழியாக ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட நாள் இது. ‘தமிழ்க் கவிஞர் நாள்’ இது 29.04.2024 முதல் பாரதிதாசன் பிறந்த நாள் அன்று கொண்டாடப்பட்டு வருகிறது.

எழுத்தாளர்கள் சமூகத்தில் தொடர்ந்து நினை வுகூரப்பட வேண்டும், கொண்டாடப்பட வேண்டும் என்ற நோக்கில் அறிவிக்கப்பட்டு, அந்த நாட்களில் அந்தந்த எழுத்தாளர்களுடைய நூல்களைப் படிக்கும் விதமாகவும் அவர்களின் நினைவுகளைப் போற்றும் விதமாகவும் கொண்டாடப்படுவதற்கு தமிழ்நாட்டு முதல மைச்சர் ஏற்பாடு செய்திருக்கிறார். பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பல எழுத்தாளர்களுடைய நூல்களை நாட்டுடமையாக்கி, சம்பந்தப்பட்ட எழுத்தாளர்களின் குடும்பங்களுக்குப் பணமாக வழங்கி வருகிறார்.

**தமிழ்நாட்டின் வரலாற்றில் இதுவரை எழுத்தாளர்கள் இறந்தால், ஆளுநர், அமைச்சர், முதலமைச்சர் ஆகியோர் ஒரு இரங்கல் அறிவிப்புகூட வெளியிடப்படாத நிலைதான் இருந்தது. செய்தித் தாள்களில்கூட சிறு குறிப்பு வராது. செய்தி சேனல்கள் கண்டுகொள்ளாது. ஆனால், தற்போதைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், எழுத்தாளர்கள் இறந்தால் அவர்களுடைய உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என அறிவித்தார்.**

**அதன்படி எழுத்தாளர் கி.ராஜநாராயணன் இறந்தபோது அவரது உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப் பட்டது. அதே போன்று கவிஞர் ஈரோடு தமிழன்பன் இறந்தபோதும், அவரது உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. நேரில் சென்று அஞ்சலியும் செலுத்தினார். கி.ராஜநாராயணன் அவர்களுக்கு நினைவு மண்டபத்தையும் கட்டியிருக்கிறார். இன்னொரு அதிசயத்தையும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் செய்திருக்கிறார். 21.01.2026 அன்று சட்டமன்றத்தில் கவிஞர் ஈரோடு தமிழன்பன் இறந்ததற்காக இரங்கல் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார். தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றில் அல்லது பிற மாநில சட்டமன்ற வரலாற்றில், இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் ஒரு எழுத்தாளருக்கு இரங்கல் தீர்மானம் இதுவரை நிறைவேற்றியதில்லை. இந்த வரலாற்றுச் செயலைச் செய்தவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மட்டும்தான்.**

தமிழ்நாட்டில் உள்ள எழுத்தாளர்கள் இந்திய அளவில், உலக அளவில் உயரிய விருதுகளைப் பெற்றால், அவர்களுக்கு தமிழ்நாடு அரசு, ‘கலைஞர் கனவு இல்லத் திட்ட’த்தின் மூலம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் வீடு வழங்கி வருகிறது. இதுவரை 22 நபர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. படைப்பிற்காக மட்டும் விருது வழங்குவதோடு மொழிபெயர்ப்புக்காக விருது பெறுபவர்களுக்கும் கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் மூலம் வீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் ஏற்று, தமிழ்நாட்டின் முதலமைச்சர் 10 நபர்களுக்கு வீடு ஒதுக்கீடு செய்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம், ரெட்டியார்பட்டியில் 20.12.2025 அன்று சுமார் 13 ஏக்கர் பரப்பளவில் 54,296 சதுர அடி பரப்பில் ரூ.67.00 கோடி மதிப்பீட்டில் பொருநை அருங்காட்சியகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்த அருங்காட்சியகம் தமிழ்நாட்டின் 3200 ஆண்டுகால தொன்மை நாகரிகத்தின் பெருமையை எடுத்துக்காட்டும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது.

இதே போன்று. 05.03.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கீழடி கிராமத்தில் கீழடி அகழாய்வு அருங்காட்சியகம் தொடங்கி வைக்கப்பட்டது.

**இச்செயல்கள் தமிழர்களின் பழங்கால வாழ்வியலை உலகிற்கு எடுத்துக்காட்டும் செயல் ஆகும். இந்திய நாகரிகம் என்பது வைகை ஆறு நாகரிகம் என்பதுதான். கங்கை நாகரிகம் அல்ல என்பதை நிரூபிப்பதற்காகவே பொருநை மற்றும் கீழடி அருங்காட்சியங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. எழுத்தாளர்களை மட்டுமல்ல, தொல்லியலையும் கொண்டாடிக்கொண்டிருக்கிறார் தமிழ்நாட்டின் முதலமைச்சர்.**

**தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் கற்பனையிலும் நினைத்திராத பல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார். இது தமிழ் எழுத்தாளர்களுக்கான, பதிப்பாளர்களுக்கான பொற்காலம். அதனால்தான் எழுத்தாளர்கள் கொண்டாடும் முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் இருக்கிறார். அதே மாதிரி, எழுத்தாளர்களைக் கொண்டாடும் முதலமைச்சராகவும் இருக்கிறார். இச்செயல் தமிழ்நாட்டு அரசியலில் நிகழ்ந்த அதிசயம்.**